கேட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதைப்பற்றி தற்போது என்னிடத்திலே விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதைப் பற்றி விவரமாகப் பதில் அளிக்க முடியும்.

பச்சையாறு அணைத் திட்டம்.

643—(*வினா எண். 3446)—திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், பச்சையாறு அணைத் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) மற்றும் (ஆ) இத் திட்டம் மேற்கொள்ள சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக் கூறுகள் ஏன் இல்லை என்பதை அறிவதோடு தங்கவால் குரங்கு அங்கே இருப்பதாகவும் சிலர் சொல்கிறார்கள். அந்த குரங்குகளுக்கும் தண்ணீர் பெருக்கெடுத்து வருவதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொல்கிறார்கள், அது உண்மையா? வன இலாக்கா அதிகாரிகள் பார்த்தும், அதற்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறார்களே, தமிழக அரசு இது சம்பந்தமாகத் தீர்க்க ஆலோசனை செய்து மத்திய அரசோடு பேச முடியுமா? இது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1986 மே 2]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நாம் மேற்கொண்டோம் என்றால், குறைந்த அளவு 100.5 ஏக்கரா வனப் பிரதேசத்திற்குச் சொந்தமான நிலத்தை இந்த அரசு கையகப்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவ்வாறு கையகப்படுத்தினால்தான் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும். அதைக் கையகப்படுத்த வேண்டுமென்றால் வனத் துறையின் அனுமதி வேண்டும். அந்த அனுமதி மத்திய அரசின் ஒப்புதலோடுதான் தர முடியும். தங்க வால் குரங்கு என்று சொன்னார்கள்; தங்க வால் குரங்கு அல்ல, சிங்கவால் குரங்கு—ஆதலால் அந்த அனுமதியை வழங்க மறுக்கிறது. அந்த அனுமதியை வழங்க வேண்டுமென்ற கோரிக்கை தொடர்ந்து வைக்கப்படுகிறது. ஆனால் அந்தக் கோரிக்கை இதுவரையில் ஏற்கப்படவில்லை. ஆகவே, மைய அரசு அனுமதியை வழங்கினால்தான் தொடர்ந்து அதற்கான ஆய்வுகளை மேற்கொள்ள முடியும். இன்னும் ஆய்வே மேற்கொள்ளப்படவில்லை.

இரவிமங்கலம் கண்மாய்.

644—(*வினா 7825)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா -

(அ) அண்ணா மாவட்டம் பழனித் தொகுதி இரவிமங்கலம் கிராமம், இரவிமங்கலம் கண்மாயை செப்பனிட பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த இரவிமங்கலம் கண்மாய் சம்பந்தமாக ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு, 44 இலட்சம் ரூபாய் சேங்க்ஷன் செய்யப்பட்டு, வேலை செய்யப்படவில்லை என்று அந்த இலாக்காவைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள்; அந்த மக்களும் சொல்கிறார்களே, ஆனால் அமைச்சரவர்கள் இது ஆய்வே செய்யப்படவில்லை என்று சொல்கிறார்கள். இதில் எது உண்மை என்பதை அறிய விரும்புகிறேன்.